**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.196/2024 – PW-1**

| | |
|---|---|
| Name | திரு.பாபு |
| Father Name | திரு.பொன்னம்பலம் |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 10.11.2025.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

என் மனைவியின் சொத்தை விற்று அந்த பணத்தையும் சேர்த்து பிரதிவாதிக்கு நான் கடன் கொடுத்ததற்கு என்னிடம் ஆதாரம் உள்ளது. இந்த வழக்கில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். மதிவாணன் என்பவர் சம்பராயநல்லூர் கிராமத்தை சேர்ந்தவர். வழக்கு கடனுறுதிச்சீட்டு என் வீட்டில் வைத்து காலை 10.00 மணிக்கு எழுதப்பட்டது. கடனுறுதிச்சீட்டை எழுதும் போது நானும், பிரதிவாதியும், அவரது அண்ணன் சாதிக் பாஷா, எனது நணபர் பாஸ்கர் மற்றும் மதிவாணன் ஆகியோர் இருந்தோம். மதிவாணன் மற்றும் பாஸ்கர் ஆகிய இருவரையும் நான் தான் அங்கு வர சொல்லியிருந்தேன். அவர்கள் இருவரும் காலை 9.30 மணிக்கு அங்கு வந்தனர். பிரதிவாதியும், அவரது அண்ணனும் காலை 10.30 மணிக்குள் வந்தனர். கடனுறுதிச்சீட்டை என் மனைவியின் தோழி அபீதா எழுதினார். கடனுறுதிச்சீட்டில் பாஸ்கர், சாதிக் பாஷா மற்றும் மதிவாணன் ஆகிய மூவரும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள். சாட்சிகளின் விலாசம் எழுதப்படவில்லை. அவர்களது பெயர்கள் மட்டும் எழுதப்பட்டது. கடனுறுதிச்சீட்டை எழுதியவரின் விலாசம் அதில் எழுதப்படவில்லை. கடனுறுதிச்சீட்டில் சபினா (எ) சபினா பீ என்று பிரதிவாதி கையெழுத்து போட்டார். கடனுறுதிச்சீட்டை எழுதிய அபீதா யதார்த்தமாக என் மனைவியை பார்க்க வந்திருந்தவரை நான் கடனுறுதிச்சீட்டை எழுத சொன்னேன். கடனுறுதிச்சீட்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதியின் கையெழுத்து தான் என்பதை நிரூபணம் செய்ய கையெழுத்து நிபுணருக்கு அதை அனுப்பி பரிசோதனை செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் அது பற்றி என் வழக்கறிஞரிடம் கேட்டு தான் சொல்ல முடியும். 2024-ல் வீடு கட்டுவதற்காக எனக்கு பணம் அவசரமாக தேவைப்பட்டது. வீடு கட்டுவதற்காக பணம் அவசரமாக தேவைப்பட்டதாக என்னுடைய வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதியின் பெயர் சபினா (எ) சபினா பீ இல்லை என்றாலும், வழக்கிற்காக நான் அவ்வாறு சொல்லியிருக்கிறேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதி எந்த காலத்திலும் என்னிடம் கடன் வாங்கவில்லை என்றாலும், எனக்கு பிரதிவாதி எந்த கடனுறுதிச்சீட்டும் எழுதிக்

கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதிக்கு ரூ.9லட்சம் கடனாக கொடுப்பதற்கு எனக்கு பண வசதி இல்லை என்றாலும், பிரதிவாதிக்கு ரூ.9லட்சம் கடன் கொடுத்ததாக என் நண்பர்களின் உதவியுடன் நான் போலியாக கடனுறுதிச்சீட்டை தயார் செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதியின் கையெழுத்து இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி எனக்கு எவ்வித தொகையும் கொடுக்கவில்லை என்றாலும், என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:-</u>** இல்லை

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.